பக்கங்கள்: 10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 20 வெள்ளிக்கிழமை 05.08.2022 கதிர் 273

**இனிது ரகசியம் அல்ல!**

இன்றும் நான் எதுவும் என் கருத்தாக எழுதப்போவதில்லை.

வடக்கு அரசியலில் இப்போது சர்ச்சைக்குரியவராக மாறியிருக்கும் வடக்கு ஆளுநர் தொடர்பில் என் செய்தியாளர்கள் வரைந்த இரண்டு செய்திகளை அடுத்தடுத்துத் தரப் பக்கம்02

# நாடாமன்றும் ஜனாதிபதியும் அடக்குமுறைப் பாதையில்!

## சிவில் சமூகப் பிரதிநிதிகள் கூட்டறிக்கை

கொழும்பு,ஒகஸ்ட்05

ஜனாதிபதியின் அவசரகால நிலைப்பிரகடனத்திற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் அளித்துள்ளமையானது நிறைவேற்றதிகாரமும் சட்டவாக்கமும் தற்போது அடக்குமுறைப் பாதையில் செல்வதையே காண்பிக்கின்றது.

சிவில் சமூகப் பிரநிதிகள் ஒன்று திரண்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## சீனத் தூதருடன் ரணில் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சீனத் தூதுவர் கியூ ஜென்ஹொங்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. ☞2

## வடக்கின் இரு மூத்த செயலர்களையும் வெற்றிகரமாகத் துரத்தினார் ஆளுநர்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.05

வடக்கு மாகாணத்தில் இருந்து இடமாற்ற முயன்ற இரு மூத்த செயலாளர்களை தற்போது கொழும்பிற்கு வருமாறு பொதுச்சேவை ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது.

வடக்கின் இரு மூத்த செயலாளர்களான இ.இளங்கோவன், பா.செந்தில்நந்தனன் ஆகியோரை மாகாணத்திற்கு வேண்டாம் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடந்த 26 ஆம் திகதி கடிதம் வழங்கியிருந்தார். இதனைக் கண்டித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ் விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற் குக் கொண்டு சென்றார்.

இதனால் மேற்படி இரு செயலாளர்கள் மற்றும் விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகிய மூவரையும் இந்த ☞2

## ஜோசப் ஸ்டாலினுக்கு 12 வரை விளக்கமறியல்




இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் புறக்கோட்டைப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை எதிர்க்கட்சித் ☞2

## ஆளுநருக்கு எதிராக 3 அதிகாரிகளும் மனித உரிமைகள் குழுவில் முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.05

வடக்கு மாகாணத்தில் இருந்து இடமாற்ற முயன்ற இரு மூத்த செயலாளர்கள் உட்பட மூவர் ஆளுநருக்கு எதிராக யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

இதில் வடக்கின் மூத்த செயலாளர்களான இ.இளங்கோவன், பாசெந்தில்நந்தனன் மற்றும் விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகிய மூவரே இந்த முறைப்பாட்டினை யாழ் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாடு சம்பந்தமான அடுத்த கட்ட நடைமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் இந்த விடயத்தை தலைமைப் பணிமனையின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.

## 80 அடி பள்ளத்தில் பாய்ந்தது பஸ் ஒருவர் பலி; பன்னிருவர் படுகாயம்



பூண்டுலோயாவிலிருந்து கம்பளை நகரை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று பூண்டுலோயா – கொத்மலை பிரதான வீதியில் மல்லாவ பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் வீதியை விட்டு விலகி சுமார் 80 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக் ☞2

## மக்களின் ஒன்று கூடும் உரிமையை மதியுங்கள்!

### மன்னிப்புச் சபை வலியுறுத்து

AMNESTY INTERNATIONAL

பொது இடங்களில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான மக்களின் உரிமைக்கு மதிப்பளிக்குமாறும், அமைதியான எதிர்ப்பாளர்களைக் கலைப்பதற்கு ☞2

## வவுனியா சேமமடுவில் நேற்று யானை தாக்கி முதியவர் சாவு

வவுனியா, சேமமடு பகுதியில் வசிக்கும் 68 வயதுடைய முதியவர் ஒருவர் நேற்றுப் பகல் காட்டில் தேன் எடுப்பதற்காகச் சென்ற போது வீதியின் குறுக்கே நின்ற யானை அவரைத் தாக்கியுள்ளது. சம்பவ இடத்தி லேயே முதியவர் மரணமடைந்துள்ளார். சைக்கிளும் துவம்சம் செய்யப்பட்டுள்ளது. பக்கம்02

## எரிவாயுத் தட்டுப்பாடு இனி வரவே வராதாம்!

இந்த வருட இறுதி வரை நாட்டில் எரிவாயுக் குத் தட்டுப்பாடு ஏற்பட மாட்டாது என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் அடுத்த வருடத்திற்கான புதிய எரிவாயு வழங்குனர் ஒருவர் தெரிவாகியுள்ளார். எனவே அடுத்த 16 மாதங்களுக்கு எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்படாது என ☞2


## போர்க் கப்பல்கள் இங்கு நுழைய அனுமதிப்பது இந்து சமுத்திர சமாதான வலயத்துக்கு ஆபத்து!

### முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை ஹக்கீம் வெளியிட்டார்

சீனப் பாதுகாப்பு ஆய்வுக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவிருக்கையில் அது தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையின் துறைமுகமொன்றிற்குள் யுவான் வாங் – 5 கப்பல் பிரவேசிப்பதையிட்டு கவலை வெளியிட்டுவரும் ஊடக அறிக்கைகளை நாங்கள் அவதானித்து வருகின்றோம்.

போர்க்கப்பல்கள், இராணுவம் அல்லது கடற்படை கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அனுமதிக்கப்படுவது ☞2



## 'அறகல்ய'காரர்கள் அகல இன்று மாலை வரைக்கெடு

காலிமுகத்திடலில் இருக்கும் பண்டாரநாயக்கவின் சிலை அருகாமையில் உள்ள கோட்டா கோ கமவில் போராடாம் நடத்துவோருக்கு ('அறகல்ய'காரர்களுக்கு) பொலிஸார் காலக்கெடு விதித்துள்ளனர்.

அங்கு நிறுவப்பட்டிருக்கும் கூடாரங்கள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு முன்னர் அகற்றப்பட வேண்டுமென பொலிஸார் ஒலிப்பெருக்கி ஊடாக அறிவித்துள்ளனர்.

சட்டவிரோத கட்டமைப்புகளை அகற்ற மீதமுள்ள எதிர்ப்பாளர்களிடம் பொலிசார் கேட்டுக்கொண்டுள்ளனர். இந்த அறிவிப்பினால் அங்கு சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போகிறேன்.

13ஆம் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் வழங்கப்படாதமை குறித்து இலங்கை – இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்தாகிய காலம் முதல் – கடந்த 35 வருடங்களாக – நாங்கள் ஏதோ பிதற்றிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர் காணி விவகாரத்தில் எவ்வளவு தில்லாலங்கடி வேலை செய்கிறார் என்பதற்கு இந்த இரண்டு செய்திகளும் நல்ல சான்று. அவ்வளவுதான். இனிமேல் செய்திக்குச் செல்வோம்.

செய்தி – 1

யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில் 5 பரப்புக் காணியை பொலிஸாரின் பயன்பாட்டிற்கு – தங்கும் செயல்பாட்டிற்கு வசதியாக – வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மாவட்ட அரச அதிபருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இக்கடிதம் தொடர்பில் பதிலளித்துள்ள யாழ். மாவட்ட அரச அதிபர், பழைய பூங்காப் பகுதி, ஒரு நம்பிக்கை நிதியப் பொறுப்பிற்கு உட்பட்ட சொத்து. எனவே அப் பிரதேசத்தில் இருந்து நிலம் வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் வடக்கு மாகாண பிரதம செயலாளரின் தங்கு விடுதி அமைப்பதற்காக கடந்த காலத்தில் பழைய பூங்காவில் நிலம் கோரப்பட்டபோதும் மறுக்கக்கட்டமை குறிப்பிடத்தக்கது.

செய்தி – 2

கிளிநொச்சி மாவட்டத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் களஞ்சியம் இருந்த இடத்தைத் தனியாருக்கு வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

1960ஆம் ஆண்டு முதல் 18 ஆண்டுகளிற்கு குத்தகை அடிப்படையில் மாவட்டச் செயலகத்தினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் களஞ்சி–யத்திற்காக இக்காணி வழங்கப்பட்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியமாக அது விளங்கியது.

அந்தப் பெற்றோலியக் களஞ்சியம் 1990ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமாகும் வரையில் செயல்பட்டு, போரின் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் அந்த நிலத்தை தனியார் ஒருவர் இப்போது அடாத்தாக அபகரித்து, எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றை எவரது அனுமதியுமின்றி அமைத்துள்ளார்.

அப்படி எரிபொருள் விற்பனை நிலையம் அமைத்துள்ள பகுதி தமக்குரியது, எனவே அதனைத் தமக்கு வழங்க ஆவன செய்யுமாறு – யுத்தம் முடிந்த பின்னர் – 2014ஆம் ஆண்டு முதல் – பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்து வருகின்றமையால் இந்தக் காணி தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இந்த நிலத்தை அடாத்தாகப் பிடித்து எரிபொருள் விற்பனை நிலையம் அமைத்துள்ள தனியார் நிறுவனத்திற்கு அதை வழங்க முடியாது என்ற தீர்மானமும் கூட்டத்தில் உள்ளது.

இருந்த போதும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரும் ஆளுநருமான ஜீவன் தியாகராஜா அந்த நிலத்தை சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளருக்கு – தனியாருக்கு – வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரான ரூபவதி கேதீஸ்வரனிற்கு பரிந்துரைத்திருக்கின்றார். எனினும் மற்றுமோர் இணைத்தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்த நிலத்தை தனியாருக்கு வழங்க எதிர்ப்பு தெரிவிப்பதனால் மாவட்ட நிர்வாகம் அடுத்த கட்டத்திற்கு நகர முடியாமல் தடுமாறுகின்றது.

– இது அடுத்த செய்தி. நமது ஆளுநரின் நற்சான்றிதழுக்கு இவை நல்ல ஆதாரங்கள்.

– மின்னல் –

## போர்க் கப்பல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடானது தேசிய இறையாண்மை, சர்வதேச சமாதானம், பாதுகாப்பு மற்றும் அணிசேராக் கொள்கை ஆகிய பரந்துபட்ட கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்து சமுத்திரத்தை சமாதான வலயமாகக் காண வேண்டும் என தொடர்ந்தும் வாதிட்டு வருகிறது. பனிப்போர் மூண்ட காலப் பகுதியில் இலங்கையால் முன்வைக்கப்பட்ட இந்தத் தொலைநோக்குச் சிந்தனை, எங்களின் பார்வையில் முன்னரை விட தற்போதைய சூழ்நிலையில் மிகவும் பொருத்தமானது.

இந்து மகா சமுத்திரத்தை எல்லாக் காலங்களிலும் பாதுகாப்பானதாக வைத்திருப்பதற்கான அனைத்து நடைமுறைகள் மற்றும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்வதற்காக, பரந்த அந்தப் பெருங்கடல் பிராந்தியத்தின் அனைத்து முற்போக்கான பிரிவினர்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் எண்ணியுள்ளோம். மேலும் அமைதியான வழிநடத்தலுடன் கூடியதான பொருளாதார நடவடிக்கைகள் கடற்கரையோர மாநிலங்களுக்கு நன்மை பயப்பதாக அமைவதோடு, அனைத்து பிரதேசங்களின் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்கும் பங்களிப்புச் செய்யும்.

அந்த அடிப்படையில் , இலங்கை மற்றும் அயல் நாடுகளின் பங்காளிகள் இந்தியப் பெருங்கடல் மீதான அத்தகைய பரந்துபட்ட நல்ல நோக்கைப் பேணிக் கொள்வதற்கு நாங்கள் ஊக்கமளிப்போம். மாறாக போர்க்கப்பல்கள் அல்லது கடற்படைக் கப்பல்கள் எமது கடல் பிராந்தியத்தைக் கடந்து செல்ல அனுமதிப்பதன் மூலம், அந்த சிறந்த நோக்கம் பெரிதும் பாதிப்படையவே செய்யும்.

இந்த நிலையில், இலங்கையின் எல்லைக்கு அப்பாலும், அதனைச் சூழவுள்ள கடல் எல்லைக்குள்ளும் இந்தியத் துணைக் கண்டத்தினதும் பாதுகாப்பிற்குக் குந்தகமான எந்த விதமான நடவடிக்கைகளும் அனுமதிக்கப்பட மாட்டாது என இலங்கை அரசியல் தலைமைகள் தொடர்ச்சியாக உறுதிப்படுத்தி வந்ததுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனவே, இத்தகைய உன்னத நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அர்த்தமுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும். – என்று உள்ளது.

## எரிவாயுத் தட்டுப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லிட்ரோ நிறுவன தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள் ளார்.

இருப்பினும், நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கவனம் செலுத்தி, மக்கள் எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மக்களின் ஒன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அச்சுறுத்தல் அல்லது பலத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் இலங்கை அதிகாரிகளுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ள அந்த அமைப்பு, போராட்டத் தளமான ‘கோட்டா கோ கம’வை காலி செய்யுமாறு பொலிஸாரின் அறிவிப்பு தொடர்பில் கவலை தெரிவித்துள்ளது.

போராட்டக்காரர்கள் மற்றும் போராட்ட ஏற்பாட்டாளர்களின் தொடர்ச்சியான கைதுகள் மூலம் அரசாங்கத்திற்கு எதிரான குரல்களின் ஒடுக்குமுறையின் தீவிரம் குறித்து எச்சரிக்கையை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் பயன்படுத்தியதற்காக மாத்திரமே தடுத்து வைக்கப்பட்டுள்ள போராட்டக்காரர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை இலங்கை அதிகாரிகள் உடனடியாக விடுவித்து கைவிட வேண்டும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகளை மதிக்கவும், பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் மற்றும் நிறைவேற்றவும், மக்கள் தங்கள் மனித உரிமைகளை சுதந்திரமாகப் பயன்படுத்த அனுமதிக்குமாறு அந்த அமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

## வடக்கின் இரு மூத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டின் டிசம்பர் வரை வடக்கிலேயே பணியாற்ற அனுமதிக்குமாறு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிற்கு ஜனாதிபதியின் செயலாளரால் வாய்மூலம் அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய நேற்றைய தினம் வடக்கில் தொடர்ந்தும் ஒப்பமிட அனுமதிக்கப்பட்ட செயலாளர்கள் எந்தவொரு பணியும் வழங்காது வெறுமையாகவே வைக்கப்பட்டனர்.

இந்த நிலையுல் நேற்றைய தினம் 5ஆம் திகதியில் இருந்து வடக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு, கொழும்பில் கடமையை பொறுப்பேற்குமாறு பொதுச் சேவை ஆணைக்குழு எழுத்தில் அறிவிந்துள்ளது. இதற்கமைய அவர்கள் இருவரும் 5ஆம் திகதியில் முதல் வடக்கில் இருந்து விடுவிக்கப்படுகின்றனர் என வடக்கின் பிரதம செயலாளரும் மேற்படி இரு செயலாளர்களிற்கும் கடிதம் எழுதியுள்ளார்.

## 80 அடி பள்ளத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குள்ளாகியது.

இவ்விபத்தில் பஸ்ஸில் பயணித்த 14 பேரில் ஒருவர் உயிரிழந்தார். மூன்று பெண்கள் உட்பட12 பேர் படுங்காயமடைந்தனர்.

மழையால் வீதி வழுக்கல் தன்மையுடன் காணப்பட்டதன் காரணமாக பஸ் சாரதிக்கு பஸ்ஸை கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி இந்த விபத்து நேர்ந்ததாக நேரடி விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

காயமடைந்த 12 பேரும், கொத்மலை வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின் இதில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக கம்பளை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்தில் உயிரிழந்தவர் புஸ்ஸலாவ நவகடதொர பகுதியை சேர்ந்த தம்மிக்க ஹேமந்த யாப்பா (வயது 56) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## வவுனியா சேமமடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதியால் சென்றவர்கள் அதனை அவதானித்து பொலிஸருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிசார் சடலத்தை மீட்டுள்ளனர்.

## நாடாமன்றும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைதிப்போராட்டக்காரர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைத்தாக்குதல்கள் தொடர்பில் அம்பிகா சற்குணநாதன், அமாலினி டி சேரா, பவானி பொன்சேகா, தில்ருக்ஷி ஹந்துனெத்தி, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, பிரிட்டோ பெர்னாண்டோ, கலாநிதி ஜெஹான் பெரேரா உள்ளிட்ட 222 மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், காணாமல்போனோர் குடும்ப ஒன்றியம், தேசிய சமாதானப்பேரவை, சமூக நீதிக்கான பெண்கள் இயக்கம் உள்ளிட்ட 70 சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு அமைதிவழியிலான கருத்து வெளிப்பாடு அவசியம் என்பதுடன் அரசியல் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்குத் தேவைப்படுவது சட்டத்தின் ஆட்சியும் சுமுகமான கலந்துரையாடலுமேயன்றி அடக்குமுறையல்ல என்று சுட்டிக்காட்டியிருக்கும் சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஆகவே போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் உடனடியாக முடிவிற்குக் கொண்டுவர வேண்டும் என்றும் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

(அறிக்கையின் முழு விவரம் இன்று மாலைப் பதிப்பில் வெளியாகும்.)

## சீனத் தூதருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவித்த சீனத்தூதுவர் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.

’ஒரே சீனா’ கொள்கையை இலங்கை கடைப்பிடிப்பதுடன், இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு ஆகிய ஐ.நா சாசனக் கோட்பாடுகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

## ஜோசப் ஸ்டாலினுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் சஜித் பிரேமதாஸா நேற்று பொலிஸ் நிலையத்தில் சென்று சந்தித்தார்.

பின்னர் கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622



# பன்னிரெண்டாம் ஆண்டில் நினைவஞ்சலி



## சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

தோற்றம்
23 . 12 . 1923

மறைவு
16 . 08 . 2010

'SVM' மூன்றெழுத்தால்
எவ்வுலகிலும் அறியப்பெற்ற ஏந்தலே!
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும்
ஐயா! உங்கள் நினைவிலேயே நாமின்றும்!

தமிழினத்தின் அடையாளமாய்
காரைநகரின் நிமிர்வாய்
வர்த்தக உலகில் வைரமாய்
அற உலகில் ஆணி வேராய்
ஆன்மீக உலகின் காவலனாய்
உழைப்பில் ஓங்கிய வடிவமாய்
யாழ்ப்பாணத்தின் பொருளாதார அடையாளமாய்
விளங்கியதே SVM முன்றெழுத்தே!

வழமோங்க வாழ வழிசெய்த
வள்ளலே உங்கள் வழி நிற்கின்றோம்!
குடும்பத்தினர்.

**உரிமையாளரும் பணியாளர்களும்**

**S.V.M (PVT) LTD**
122, Damstreet, Colombo-12.

**S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD**
160, Standely Road, Jaffna.

**SVMURUGESU**
154, Hospital Road, Jaffna.

**SVM FUEL MART**
173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.

**SVMURUGESU ( PVT) LTD**
106, Hospital Road, Jaffna.

**S.V.M. ENTERPRISE (PVT) LTD**
288, A9 Road, Karadipokku, Killinochi.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அபத்த நடவடிக்கை இது!

'வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும்
துணை வலியும் தூக்கிச் செயல்.'

– என்றான் திருநாப்போதகன் தமிழ் மறை தந்த வள்ளுவப் பெருந்தகை.

தமிழர் தரப்பில் தேசியப் பிரச்சினையைக் கையாளும் தலைமைகள், இந்த அடிப்படை தெரியாமல் கற்றுக்குட்டித்தனமாக நடந்து விடயத்தைப் போட்டுக் குழப்பி அடித்துத் தம் தலையில் தாமே மண்ணை அள்ளிக் கொட்டுகின்றனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

"உங்கள் கூட்டமைப்பின் முடிவுக்கு மாறாக, தமிழ் மக்களின் நலன் கருதி, உங்களில் கணிசமானோர் எனக்கு வாக்களித்தனர். அதன் விவரம் எனக்கு முழுமையாக தெரியும்.' – என்று புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முகத்தில் அடித்த மாதிரி கூறிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு தங்கள் வலி(மை) யாது என்பது புரிந்திருக்க வேண்டும்.

அந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, அதன் அடிப்படையில் அடுத்த விடயங்களை கட்டமைப்பதை விடுத்து, தேவையில்லாத வேலைகள் செய்து கொண்டிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. என்று தோன்றுகின்றது.

'போராட்டம் வெடிக்கும்', 'போராட்டம் வெடிக்கும்' என்று தனது கட்சித் தலைவர் வழக்கமாகப் போடும் கூப்பாட்டை, இப்போது அவர் சுமக்கத் தொடங்கி இருக்கின்றார் போலும். கட்சித் தலைவராவது தமிழர் உரிமைகளுக்காக போராட்டம் வெடிக்கும், போராட்டம் வெடிக்கும் என்பார். இவரோ தெற்கின் 'அறகலய'காரர்களுக்காகப் போராட்ட கூச்சல் போடுகின்றார்.

ஆரம்பத்தில் இருந்தே இந்த 'அறகலய'காரர்கள் விடயத்தில் தமிழர் தரப்பு எச்சரிக்கையாகவும் மிகக் கவனமாகவுமே நடந்து கொள்கின்றது. அந்தப் போராட்டத்திற்கு ஆசி தந்து, வாழ்த்துக் கூறியமையோடு தமிழர் தரப்புப் பின் நின்று விட்டது என்பதுதான் உண்மை. சுமந்திரனும் சாணக்கியனும் வடக்குக் கிழக்குத் தமிழர் அரசியலைத் தாண்டி, தென்னிலங்கை அரசியலில் தம்மை முன்னிலைப்படுத்துவதற்காக அதற்குள் போய் கரைய முயன்றார்களே தவிர, அதில் தமிழர் தரப்பு எச்சரிக்கையுடன் தள்ளி நின்று பார்க்கும் நிலைப்பாட்டையே கடைப்பிடித்தது; கடைப்பிடிப்பதில் தெளிவாகவும் உள்ளது.

கூட்டமைப்பில் கூட கூடிப் பேசித் தீர்மானிக்காத ஒரு விடயத்தை – 'அறகலய'வின் பத்துத் தீர்மானங்களை நாங்கள் கூட்டமைப்பினர் முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம் என்று தம்பாட்டில் – தம்மிஷ்டப்படி – அவர்கள் கூட்டத்தில் போய் அறிவிக்கின்றார் சுமந்திரன். இப்போதும் 'அறகலய' காரர்களுக்காகப் போராட்டம் வெடிக்கும் என்று கூட்டமைப்பு பேச்சாளராக தெற்கில் போய் நின்று அவர் பிரகடனப்படுத்துகின்றார்.

இப்போது ஓகஸ்ட் மாதம். அடுத்த மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் மன்றில் – அதன் 51 ஆவது அமர்வில் – இலங்கை தொடர்பாக முக்கிய விடயங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன. யுத்தத்தின் இறுதி கட்டத்தில் தமிழருக்கு இழைக்கப்பட்ட பெரும் யுத்தக் கொடூரங்களுக்காக – யுத்தக் குற்றங்களுக்காக – மனித குலத்துக்கு எதிரான மோசமான செயல்களுக்காக – மனித உரிமை மீறலுக்காக – அங்கு நீதி கேட்கப்படும் போது, சுமந்திரனின் இந்த புது 'அறகல்ய' தோழர்களில் யார், யார் தமிழர் தரப்புக்குக் கூட்டுக்கு – ஆதரவுக்கு – அவருடன் சேர்ந்து வருவார்கள் என்பதை பார்ப்போம். அப்போது எங்களுடன் நீதி, நியாயத்துக்கு குரல் கொடுக்க மாட்டாத தரப்புகளுக்கு, தமிழ் மக்களின் விருப்போ, இசைவோயின்றியே – ஏனைய தமிழ் கட்சித் தலைவர்களின் சம்மதமின்றியே – சுமந்திரனும் சாணக்கியனும் ஏன் குத்திமுறிய வேண்டும்?

தம்மைப் பதவிக்கு கொண்டு வந்தவர்களுக்கு எதிராக – அவர்களின் முதுகிலேறி பதவிக்கு வந்த – ரணில் நடவடிக்கை எடுக்கின்றார் என்று விடயங்களை மறைத்து விதண்டாவாதம் செய்யும் தேவை சுமந்திரனுக்கு ஏன் வந்தது? அரசமைப்பின்படி ஜனாதிபதியான ரணிலையும் சேர்த்து பதவியில் இருந்து துரத்துவதற்கு சுமந்திரனுடன் சேர்ந்து காரியமாற்றியவர்களுக்கு எதிராகவே இப்போது நடவடிக்கைகள் கட்டவிழ்கின்றன. ரணிலையும் சேர்த்துத் துரத்த சட்டத்தையும் மீறி அவர்கள் எடுத்த முயற்சி பலனளிக்காத பின்புலத்தில் ரணிலின் அரசு நடவடிக்கை எடுக்கின்றது என்பதை திரித்துக் காட்டும் சுமந்திரன் போன்றோரின் இந்த நடவடிக்கை தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேவையற்ற விவகாரம். அர்த்தமற்ற, அபத்த நடவடிக்கை.

# அதிகரிக்கும் சிறுவர்களின் போசணைத்தேவையை பூர்த்திசெய்யமுடியாத நெருக்கடியில் பெற்றோர்கள்

## இலங்கையின் நிலை தொடர்பில் யுனிசெவ் கருத்து

இலங்கையில் வாழும் சிறுவர்களின் தேவைகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. இருப்பினும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் போசணை மற்றும் வளர்ச்சி என்பவற்றுக்கு அவசியமான வளங்களைப் பெற்றுக் கொடுக்கமுடியாத நிலையிலுள்ளனர் என்று யுனிசெப் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

நாட்டின் நெருக்கடி நிலைவரத்தால் சிறுவர்கள் முகங்கொடுத்திருக்கும் பாதிப்புக்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள யுனிசெப் அமைப்பின் அமெரிக்கக்கிளை –

இலங்கையில் வாழும் சிறுவர்களின் தேவைகள் நாளாந்தம் அதிகரித்துவருகின்றன.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் போசணை மற்றும் வளர்ச்சி என்பவற்றுக்குப் பங்களிப்புச்செய்யக்கூடிய அவசியமான வளங்களைப் பெற்றுக் கொடுக்கமுடியாத நிலையிலுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் அவர்களுக்கு உதவுவதற்காக யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கிளையும் அரசாங்கமும்தொடர்ச்சியாகஒன்றிணைந்து பணியாற்றிவருகின்றனர். – என்று சுட்டிக்காட்டியுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கையின் நெருக்கடி, அதிகரித்த பணவீக்கம் ஏற்படுவதற்கு வழிவகுத்திருப்பதுடன் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களுக்குத் தட்டுப்பாட்டைத் தோற்றுவித்திருப்பதாகத் தெரிவித்துள்ள அந்த அமைப்பு, பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொடுக்க முடியாதநிலைக்குத்தள்ளப்பட்டிருப்பதாகவும் கவலை வெளியிட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக தேவபுரத்தைச் சேர்ந்த ஒன்றரை வயதுடைய இரட்டைக் குழந்தைகளின் தாயான கிரிாந்தினி என்பவர் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையின் விளைவாக முகங்கொடுத்திருக்கும் பாதிப்புக்கள் தொடர்பிலும் யுனிசெப் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள யுனிசெப், இலங்கைக்கிளையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி ரெஃபின்ஸியா பீட்டர்ஸன் கூறியிருப்பதாவது –

இங்குள்ள பெரும்பாலான குடும்பங்கள் நாளொன்றில் மூன்று வேளை உணவைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையிலிருப்பதுடன் எரிபொருள் தட்டுப்பாடு அவர்களது வாழ்வாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது.

இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரம் பிரதானமாக விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகியவற்றில் தங்கியிருக்கும் நிலையில் எரிபொருள் இன்மையால் அவற்றைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

# வீணை மைந்தனின் பவள விழா ஞாயிறு நாவலர் மண்டபத்தில்!

*காங்கேசன்துறை அமெரிக்கன் மின் பாடசாலையின் பழைய மாணவரும், கனந்த் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் நிறுவுநரும், கலை, இலக்கியப் படைப்பாளியுமான வீணைமைந்தன் கே.ரி.சண்முகராஜாவின் பவளவிழாவும் 'வீணை மைந்தன் 75' நூல் வெளியீட்டு விழாவும் வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ் இலக்கிய வட்டத் தலைவரும், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர்கலாநிதிஎன்.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற இருக்கின்றது.*

*யாழ் பல்கலைக்கழக இசை துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகும் நிகழ்வில், யாழ் இலக்கிய வட்ட செயலாளர் நயினை கி.கிருபானந்தன் வரவேற்புரை நிகழ்த்துவார். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துவார்.*

*யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் என்.சிவலிங்கராஜா, நடிகமணியின் மூத்த மகளான இசை, நாடகக் கலைஞர் திருமதி வசந்தா ஐயாதுரை, பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடாதிபதி கலாநிதி திருமதி சுகந்தி சிறிமுரளிதரன், வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுத் தலைவர் அ.குணபாலசிங்கம், யாழ்ப பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முன்னாள் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், யாழ்ப்பாணம் தமிழ் சங்கத் தலைவரும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உப அதிபருமான ச.லலீசன், 'வலம்புரி' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், யாழ் மாநகர சபை ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலன், இலங்கை தொழில்சார் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ்.செல்வநாயகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்*

*'வீணை மைந்தன் 75' பவள விழா மலரின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ராஜேஷ் கண்ணன் ஆற்ற, கல்விக்காருண்யன் கலாநிதி இ.எஸ்.பி.நாகரத்தினம் முதற் பிரதியைப் பெறுவார்.*

*மலர் நயப்புரையை வலிகாமம் வலய தமிழ்ப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பா.மகாலிங்கசிவம் வழங்குவார்.*

*விழா நாயகன் கௌரவிப்பின் பின்னர் விழா நாயகன் ஏற்புரையை ஆற்றுவார்.*

*யாழ் இலக்கிய வட்டம் இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.*

# யாழ் இந்துவில் கால் கோள் விழா

*யாழ் இந்துக் கல்லூரிக்கு புதிதாக அனுமதி பெற்று தரம் ஆறில் கல்வி பயில வரும் மாணவர்களை வரவேற்கும் முகமாக நடாத்தப்படும் கால்கோள் விழா நாளை சனிக்கிழமை 6 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் இடம்பெறவிருக்கின்றது.*



செல்லத்துரை ரவீந்திரன்

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# பாலசிங்கத்தின் நகர்வுகள்



## அங்கம் - 83

சென்னையில் பாலசிங்கம் பெற்றுக் கொண்ட தகவல்களின்படி சந்திரகாசனுடன் சேர்ந்து இயங்கிய றோவின் அதிகாரிகள் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் ஆகிய குழுக்களில் இருந்து பெறப்பட்ட இளைஞர்களை ஏற்று பயிற்சிகளுக்காக வட மாநிலங்களுக்கு அனுப்பி இருந்தனர்.

பாலசிங்கம் தனது 'போரும் சமாதானமும்' என்ற நூலில் குறித்தவாறு பின்னர் சந்திரகாசனினது தொடர்பாளருடன் விடுதலைப் புலிகளுக்கான பயிற்சி பற்றிப் பேசியபோது இரண்டு விடயங்கள் கூறப்பட்டனவாம்.

அவர்கள் விடுதலைப் புலிகளின் அங்கத்தினர்களைப் பயிற்சிக்கு ஏற்றுக் கொள்வதில் தடை இல்லை. ஆனால் பயிற்சிகளுக்குப் பின் எல்லா இளைஞர்களும் ஓர் அணியின் கீழ் இயங்க எதிர்பார்க்கப்படுகின்றது எனவும், அவர்கள் சந்திரகாசனைத் தமிழ் விடுதலை இயக்க அரசியல் தலைவராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் நிபந்தனைகள் தரப்பட்டன.

இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் பாலசிங்கமோ அவரது மனைவி அடேலோ ஒத்துக் கொள்ளவில்லை. அதேபோல் அவற்றைப் பிரபாகரனும் நிராகரித்து, றோவுடன் நேரடித் தொடர்பில் அவற்றிற்கு ஆவன செய்யுமாறு பாலசிங்கம் கேட்கப்பட்டார்.

பாலசிங்கம் ஹோட்டலில் இருந்து வெளியேறி, தனக்கென ஒரு வீட்டில் குடியேறிய பொழுது அதனையும் அதில் வசிப்பவர்களையும் பொலிஸில் பதிய வேண்டிய கட்டுப்பாடு இருந்தது. அந்த வீடும், அங்கு வந்து போனவர்களின் பின்னணிகளும் மாநிலப் புலனாய்வுப் பிரிவுகளின் கவனிப்புக்கு வந்ததால் அதனால் பாலசிங்கம் புலனாய்வு பிரிவினருடன் பல சந்திப்புகளை ஏற்படுத்த வேண்டி நேர்ந்தது. புலனாய்வு பிரிவின் பிரத்தியேகப் பிரிவின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (டி.ஐ.ஜி.) அலெக்ஸாண்டரின் அறிமுகம் கிட்டியது. அலெக்ஸாண்டர் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கு மிகவும் வேண்டப்பட்டவர். பிரத்தியேக பிரிவின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரலாக அவருக்கு தமிழ் நாட்டில் இயங்கும் எல்லா விடுதலை குழுக்களையும் அவற்றில் ஈடுபட்டு இருப்பவர்களின் விவரங்களும் தெரிந்திருந்தன. அதில் றோ அமைப்பில் இயங்கியவர்களையும், அவர்களில் யார் யாரோடு தொடர்புகளில் இருந்தார்கள் என்பதையும் அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

தேசிய அரசின் நடப்புக்களில் மாநில அரசுகள் வழக்கமாக குறுக்கிடுவதில்லை. அதுவும் பாதுகாப்பு பற்றிய விடயங்களில் தெரியப்படுத்தப்பட்டனற்றை அறிந்து கொண்டு, மாநிலத்துக்குத் தரக்கூடிய அமுலாக்கங்களில் தலையீடுகளுக்காக சமர்ப்பணம் வைக்கலாம். அவ்வளவே. தமிழ்நாடு சட்ட நிர்வாகங்கள், அதன் பாதுகாப்பு, தேசியத்தின் பாதுகாப்புப் போன்றவற்றுக்குக் கூட விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள், சவால்கள் தருவனவாக இருந்தும் அவற்றிற்கு கருணாநிதி அரசு துணையாகவோ அல்லது அவை குறித்து அக்கறையின்றியோ இருக்கிறது என்ற சமர்ப்பண்களால்தான் ஜெயலலிதா, பிரதமராக இருந்த வி.பி.சிங் மூலம் தமிழக மாநில அரசைக் கலைக்கச் செய்தார்.



பல குழுக்கள் றோவின் முகவர்கள் அறிந்தோ, அறியாமலோ ஈடுபட்டுக் கொண்டிருக்கும் குற்றச்செயல்கள் சமுதாய அதிருப்தியைத் தருகின்றமையை அலெக்ஸாண்டர் விளக்கி, தன் அபிப்பிராயத்தில் தற்சமயம் சென்னையில் பொறுப்பில் இருக்கும் றோ அதிகாரி நேர்மையானவரோ நம்பத்தகுந்தவரோ அல்லர் எனவும், விடுதலைப் புலிகளின் பயிற்சிகளுக்காக அவரை அணுகுவது புத்திசாலித்தனம் அல்ல என்பதையும் பாலசிங்கத்துக்கு அறிவுறுத்தினார்.

இருதரப்பிலும் இருந்த நம்பிக்கைகள் வளர்ந்தன. அதுவே மெல்ல, மெல்ல எம்.ஜி.ஆரையும் சென்றடைந்து. அவர் விடுதலை புலிகளின் ஆதரவாளராகவும் அவர்களின் வள்ளலாகவும் மாறினார்.

### பாலசிங்கத்தின் அணுகுமுறை

அலெக்சாண்டரின் ஆலோசனைப்படி பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் தோற்றம், அவர்களது இலட்சியம், அவர்களது அமைப்பு முறை, மற்ற விடுதலை குழுக்களிடமிருந்து வேறுபட்டு அவர்களுக்கு இருந்த தனித்துவங்கள், அரசியல் கோட்பாடுகள் என்பன கொண்ட விவரமான கடிதம் ஒன்றைத் தயார் செய்தார். அதனோடு, தாங்களும் இந்தியாவினுடைய ஆயுதப் பயிற்சிகளில் இணைந்து கொள்ள விரும்புகின்றனர் எனத் தெரிவித்து, பிரதமர் இந்திரா காந்திக்கு நேரடியாகவே கடிதம் ஒன்றை அனுப்பினார். அதில் தாங்கள் ஏன் சென்னையில் றோ அமைப்பின் ஊடாக இணையவில்லை என்ற காரணங்களுக்கான சமர்ப்பணங்களும் இருந்தன. அதன் பிரதி ஒன்று புதுடெல்லியில் உளவுத்துறை பொறுப்பதிகாரி சக்ஸ்சேனாவுக்கும் அனுப்பப்பட்டது.

கடிதங்கள் சென்றடைந்த சில வாரங்களுக்குள்ளேயே சந்திரசேகரன் என்ற தமிழ்நாட்டை சேர்ந்த றோவின் உயரதிகாரி சென்னையில் பாலசிங்கத்தைச் சந்தித்து இயக்கத்தை பற்றிய முக்கியமான விவரங்களைக் கேட்டறிந்து கொண்டார். தாங்கள் விடுதலைப் புலிகளுக்கும் பயிற்சிகள் தரலாம் எனவும், அவற்றுக்கு முன் பிரபாகரனைத் தான் நேரடியாகச் சந்திக்க வேண்டும் எனவும் அறிவித்துச் சென்றார். பிரபாகரன் தமிழ் நாட்டில் நீதிமன்றப் பிணையை முறித்துச் சென்ற இக்கட்டுகளும் தமிழ்நாட்டிற்குள் வருவதற்கான ஆதங்கங்களும் சந்திரசேகரனுக்கு விளங்கப்படுத்தப்பட்டபோது அவற்றைப் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்ற உத்தரவாதங்கள் தரப்பட்டன.

சந்திப்பின் விவரங்களைப் பிரபாகரனுக்கு தெரிவித்து அவரை வரும்படி கேட்க நம்பிக்கையீனங்களால் அமைப்பின் ரகுவையும் மாத்தையாவையும் பேச்சுக்கு பிரபாகரன் அனுப்பி வைத்தார். பேச்சுக்கு வந்தவர்களும் அந்த நம்பிக்கையீனமே. இது பிரபாகரனை சிறைப்படுத்த றோ அமைப்பு உருவாக்கும் சதி என்றும், தலைவரைச் சந்திப்புக்குக் கொண்டு வராமல் விடுவது நல்லது என்றும் கருத்தில் நின்றார்கள். பாலசிங்கம் அவர்கள் மூலம் அனுப்பிய நம்பிக்கை தரும் கடிதத்தின் பின்னர் பிரபாகரன் வந்தாலும், ஆதங்கங்களால் அந்தச் சந்திப்பு தமிழ் நாட்டைத் தவிர்த்து, பாண்டிச்சேரி பிரதேசத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தின் பின் சந்திரசேகரன், நாயர் என்ற அதிகாரியை விடுதலைப் புலிகளுக்காக நியமித்தார். சந்திப்பின் போது சந்திரசேகரன் பிரபாகரனும் பாலசிங்கமும் பல அடிப்படை கருத்துகளை பரிமாறிக் கொண்டார்கள். ஒருவருக்கொருவர் நம்பிக்கைக்குரியவர்களானார்கள். விடுதலைப்புலிகளின் 200 அங்கத்தினருக்கு நூறு, நூறு பேராக வட மாநிலத்தின் டெஹிராடூன் என்ற இராணுவப் பகுதியில் பயிற்சி எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பரிமாறப்பட்ட முக்கிய விடயங்கள் இரண்டு பகுதிகளினதும் நோக்கங்களை பற்றியவை. சந்திரசேகரன் இப்படியான பயிற்சிகளால் வங்காளதேசத்தினது 'முக்திவாஹினி' அடிப்படையில் ஒரு விடுதலைப் படையை அமைக்கும் நோக்கம் தங்களுக்கோ இந்திரா காந்திக்கோ இல்லை, தமிழ் அரசியல் தலைவர்களினதும் விடுதலைக் குழுக்களினதும் அரசியல் அபிலாசையான தனித்தமிழீழம் அமைவது பற்றியும் இந்திரா காந்தி அறிந்திருந்தார், அதனை அமைப்பது அவரது நிலைப்பாடு அல்ல, ஜே.ஆருடன் நடத்தப்பட்ட மாநாடுகளின் பெறுபேறுகளால் இந்திரா காந்தி அவரின் மீது நம்பிக்கை இழந்தும், விரக்தியிலும் இருக்கிறார், வேறு நெருக்குவாரங்களைத் தந்து அவரைப் பணிய வைத்து, தமிழர்களுக்கு சாதகமான, அதேசமயம் ஸ்ரீலங்காவின் இறைமையைப் பாதிக்காத, ஒரு தீர்வை நோக்கி நகரவே சில உள்ளூர் ஆயுத தாக்கங்களையும் ஏற்படுத்தி, ஜே.ஆரின் இராணுவத்தினால் வென்று விட முடியாது என்ற செய்திக்காகவே இவை மேற்கொள்ளப்படுகின்றன என்ற திட்டங்களையும் விரைப்படுத்தினார்.

மற்றைய ஆயுதக் குழுக்களோ அவர்களின் பின்னணியிலிருக்கும் அரசியல் தலைவர்களோ இவையெல்லாம் பங்களாதேஷ் மாதிரி இந்தியா உள்ளீடு செய்து தமிழீழம் அமைப்பதற்கான முஸ்தீபுகள் எனக் கருதினால் அது அவர்களது கணக்கீடு, ஸ்ரீலங்காவை இந்தியா ஊடுருவ வேண்டுமானால், அதற்காக இந்திய இராணுவமும் அரசும் உரிய திட்டங்களை வகுக்கும், அவற்றுக்கு இவை (இந்தத் தமிழ் அமைப்புகள்) தேவையற்றவை என்பதும் தெளிவாகப்பட்டது.

பிரபாகரனுக்கும் பாலசிங்கத்திற்கும் தாங்கள் முக்திவாஹினியாகப் பயிற்றப்படவில்லை என்பது புரிந்தது. அதேவேளை தாங்கள் அந்த நீரோட்டத்தில் சேர்ந்து பயிற்சி எடுக்காதுவிட்டால் மற்றவர்கள் பெறுகின்ற பயிற்சிகளின் உதவியால் தாங்கள் பலவீனப்படுத்தப்படலாம் அல்லது இந்தியாவின் அரவணைப்பில்லாமல் தாங்கள் ஒதுக்கப்படலாம் என்ற ஆதங்கங்களும் இருந்தன. அதேசமயம் ஜே.ஆர். பற்றி இந்தியா எடுத்த கணக்குக்கு ஆதரவாகப் பார்த்து அதற்குத் துணை போக வேண்டும் என்ற கருத்தும் இருந்தது.

அவற்றை எடை போட்டு, வட மாநிலத்தில் நடைபெற்ற பயிற்சிகளைப் பிரபாகரன் கூடப் பார்வையிட்டார். முடிவில் ஒத்துக்கொள்ளப்பட்ட கனரக ஆயுதங்கள், நவீன துப்பாக்கிகள் போன்ற குறைகள் இருந்தன. பின் நடந்தற்றுடன் பார்க்கையில் அவையெல்லாம் சுண்டைக்காய் விடயங்கள்.

பிற்குறிப்பு: நேற்றைய தொடரில் ஒரு சிறு தவறு. பிரபாகரன் –உமா மகேஸ்வரன் இடையேயான சூட்டுச் சம்பவம் சென்னை பாண்டிபஜாரிலேயே நடைபெற்றது.

அது தவறுதலாக 'பாண்டிச்சேரி' எனப் பிரசுரமாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

(வளரும்)

# இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பில் திடீரென குறைந்த 700 கோடி டொலர்!

இரு வருடங்களுக்குள், நாட்டின் வெளிநாட்டு கையிருப்பில் 700 கோடி டொலர்கள் திடீரென குறைவடைந்த நிலையில், அது தொடர்பில் எவரும் தேடிப் பார்க்கவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர உயர் நீதிமன்றில் சுட்டிக்காட்டி வாதங்களை முன்வைத்துள்ளார்.

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்துக்கும், சீரற்ற நிதி நிர்வாகத்துக்கும் காரணமானவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை புதன்கிழமை 2 ஆம் நாளாகவும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போது அவர் இந்த வாதங்களை முன்வைத்தார்.

அத்துடன் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர், வெளிநாடு செல்ல உயர் நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை எதிர்வரும் ஓகஸ்ட் 11 ஆம் திகதிவரை இதன்போது நீடிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட பிரதிவாதிகளான மத்திய வங்கி முன்னாள் ஆளுநர்களான பேராசிரியர் டப்ளியூ. டி. லக்ஷ்மன், அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சின் முன்னாள் செயலர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோர் நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்லப் போவதில்லை என நீதிமன்றுக்கு உறுதியளித்துள்ள நிலையில், அந்த உறுதிப்பாடும் எதிர்வரும் ஓகஸ்ட் 11 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே,விஜித் மலல்கொட மற்றும் எல்.ரி.பி. தெஹிதெனிய, மூர்து பெர்னாண்டோ ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போது இவ்வாறு பயணத் தடை நீடிக்கப்பட்டது.

மனுதாரர்களான இலங்கை வர்த்தகப் பேரவையின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர 2 ஆவது நாளாகவும் வாதங்களை முன்வைத்தார்.

நாடு வங்குரோத்து நிலையை நோக்கி சென்றுகொண்டிருந்த போது, அச்சமயம் மத்திய வங்கி ஆளுநராக இருந்த அஜித் நிவாட் கப்ரால் உண்மையான நிலைமையை மறைத்து நிலைமை சுமுகமாக இருப்பதாக பொது மக்களை ஏமாற்றும் வண்ணம் நடந்துகொண்டார் என ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர குற்றம் சுமத்தினார்.

கடந்த 2022 மார்ச் மாதம் இறுதியாகும் போது நாட்டில் இரு வாரங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்கான வெளிநாட்டு கையிருப்பே இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இம்மனுக்கள் தொடர்பில் அஜித் நிவாட் கப்ரால் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனைகளைப் பார்க்கும் போது, நாட்டில் இத்தனை அழிவுகள் நடந்தும் நாட்டின் நிலைமையை அவர் இன்னும் உணர்ந்துகொள்ளவில்லை என்றே தோன்றுவதாக ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர தெரிவித்தார்.

இரசாயன உரப் பாவனையைத் தடை செய்தமை,சேதனப் பசளை பயன்பாட்டை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்களை நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் அமுல் செய்ய எத்தனித்தமை எந்த வகையிலும் அடிப்படையற்ற வெறுமனே அரசியல் கொள்கை சார் தீர்மானம் என அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதிவாதிகளின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் நாடு இன்று வங்குரோத்து நிலையை அடைந்து, அதன் விபரீதங்களை பொது மக்கள் அனுபவிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

இரு வருடங்களுக்குள்,நாட்டின் வெளிநாட்டு கையிருப்பில் 700 கோடி டொலர் குறைந்துள்ளது எனவும், இது 690 சதவீத குறைவு எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு திடீரென குறைந்தது எப்படி என கேள்வி எழுப்பினார். அது தொடர்பில் எவரும் தேடிப் பார்க்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

தவறான நிதிப் பயன்பாடு, கடன் மறுசீரமைப்புக்கு செல்லாமை, சர்வதேச நாணய நிதியத்தை நாடாமை போன்ற பிரதிவாதிகளின் பொறுப்பற்ற, தான்தோன்றித்தனமான தீர்மானங்கள் காரணமாக நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் கலாநிதி மஹிம் மெண்டிஸ் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய வாதங்களை முன்வைத்தார்.

உலகின் மிளிர்ந்த ஒரு நாடான இலங்கையை தற்போது உலகம் பொருளாதார வங்குரோத்து நிலைமைக்கு உதாரணமாகக் காண்பித்து வருவதாக ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய உயர் நீதிமன்றில் சுட்டிக்காட்டி வாதங்களைத் தொடர்ந்தார்.அதிகாரிகளும் அதிகார வர்க்கத்தினரும் தமது தனிப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதை விடுத்து எப்போதும் பொது மக்கள் நலன் தொடர்பில் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, வரி நீக்கம் அமைச்சரவை எடுத்த மிக மோசமான முட்டாள்தனமான தீர்மானம் எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து இம்மனுக்கள் தொடர்பிலான மேலதிக பரிசீலனைகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

மூன்று பல்கலைக்கழக புத்திஜீவிகள், இலங்கையைச் சேர்ந்த நீச்சல் வீரரும் பயிற்றுவிப்பாளருமான ஜூலியன் பொல்லிங், இலங்கை வர்த்தகப் பேரவையின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு மற்றும் ஜெஹான் கனகரத்ன ஆகியோரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் மற்றும் சீரற்ற நிதி நிர்வாகம் ஆகியவற்றுக்கான முக்கிய பொறுப்பாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அந்த மனுக்களில் கோரப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி அத்துலசிறி குமார சமரகோன், புத்திஜீவிகளான சூசையப்பு நேவிஸ் மொறாயஸ் மற்றும் கலாநிதி மஹிம் மெண்டிஸ் ஆகியோர் தமது மனுக்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால் மற்றும் டபிள்யூ.டி.லக்ஷ்மன், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட் டிகல உள்ளிட்ட 39 பேரை பிரதிவாதிகளாகப் பெயரிட்டிருந்தனர்.

தற்போது ரணில் விக்கிரமசிங்க பிரதிவாதி பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதிவாதி பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வரிக்குறைப்புக்களே நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைக்குப் பிரதான காரணமென மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கோட்டாபய ராஜபக்ஷ முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக மக்களால் செலுத்தப்படும் வரிகளைக் குறைப்பதற்குத் தன்னிச்சையான தீர்மானத்தை மேற்கொண்டார் என்றும், இந்தத் தீர்மானம் முற்றுமுழுதாக அரசியல் ரீதியான நகர்வென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் கணக்காய்வாளர் நாயகம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையின் கொடுக்கல், வாங்கல்களைக் கணக்காய்விற்கு உட்படுத்தி மத்திய வங்கிக்கு ஏற்பட்டிருக்கும் நட்டத்தை மதிப்பீடு செய்யும்படி உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர ஆகியோரும் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் நரின் புள்ளேவும் ஆஜராகின்றனர். முன்னாள் பிரதமர் மஹிந்த மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன ஆஜராகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டா மீதான மனித உரிமைமீறல் குற்றங்களுக்கப்பால் பொருளாதாரக் குற்றங்களும் முறைப்பாட்டில் உள்ளடக்கம்



## ஜஸ்மின் சூக்கா சுட்டிக்காட்டு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளடங்கலாக ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகின்ற முக்கிய பொறுப்புக்களை வகித்தனர் எனச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா, எனவே தாம் சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்திருக்கும் குற்றவியல் முறைப்பாட்டில் மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு அப்பால் பாரிய ஊழல், மோசடிகள் உள்ளடங்கலாக நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணமான பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான ஆவணங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கைதுசெய்யுமாறு வலியுறுத்தி சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தால் சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றவியல் முறைப்பாட்டு ஆவணம் தொடர்பில் பிரிட்டனைத் தளமாகக்கொண்டியங்கும் வானொலி சேவையொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே ஜஸ்மின் சூக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த நேர்காணலில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு மேமாதம் முடிவிற்குக்கொண்டுவரப்பட்ட போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மிகமோசமான மனித உரிமை மீறல் குற்றங்களில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தொடர்பு குறித்த ஆவணங்கள், ஆதாரங்கள் நாம் சமர்ப்பித்திருக்கும் குற்றவியல் முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூர் சட்டத்தின் பிரகாரம் சர்வதேச சட்ட அதிகாரவரம்பின்கீழ் இதுதொடர்பாக அந்நாட்டிலேயே விசாரணைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுமக்கள் மீதும் வைத்தியசாலைகளின் மீதும் தாக்குதல்களை நடத்துவதற்குக் கட்டளை பிறப்பித்தமை, மக்களை பட்டினியில் வாடச்செய்தமை, பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகள் சென்றடைவதில் தடையேற்படுத்தியமை, யுத்த சூனிய வலயத்தில் தாக்குதல் நடத்துவதற்குக் கட்டளையிட்டமை உள்ளடங்கலாக மனிதகுலத்துக்கு எதிரான பல குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டியவராக இருக்கின்றார். அது மாத்திரமன்றி, கடந்த 1989 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. எழுச்சி மற்றும் கலவரங்களின்போது மாத்தளை மாவட்டத்திற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியாகப் பணியாற்றிய கோட்டாபய ராஜபக்ஷ, அந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற பெருமளவான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருக்கின்றார்.

மனித உரிமை மீறல்கள் ஒருபுறமிருக்க கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது அவரது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவே பாதுகாப்புச்செயலாளராக செயற்பட்டார்.

அதுமாத்திரமன்றி அவரது குடும்ப உறுப்பினர்கள் பலரும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய முக்கிய பொறுப்புக்களை வகித்தனர். அதனைத் தொடர்ந்து 2015 - 2019 வரையான காலப்பகுதியில் ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சியதிகாரத்தை இழந்தபோதிலும், மீண்டும் 2019 ஆம் ஆண்டில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானதைத் தொடர்ந்து பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மீண்டும் அவர்களின் கைகளுக்குச் சென்றது. அதன்படி மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு அப்பால் பாரிய ஊழல், மோசடிகள் உள்ளடங்கலாக நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணமான பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான ஆவணங்களும் எமது முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

# பௌத்த தேசியவாதமும், யுத்த வெற்றி வாதமும் இராணுவ மேட்டடிமைத்தனமும் தோற்றுவிட்டன!

## இனியாவது உணருமாறு ஜனாதிபதி ரணிலுக்கு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் கடிதம்



(மன்னார் நிருபர்)

வலிமையான ஜனநாயகக் கட்டமைப்பை உருவாக்கி இன ஐக்கியத்தை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் உளப்பூர்வமாக செயலாற்றுவார்; என்று மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம். ஏனெனில் மூன்று தசாப்தமாக நீங்கள் கண்ட பெருங்கனவு பேரதிஷ்டமாக நிறைவேறியுள்ளது. ஆகவே இலக்கை எட்டுவதற்கு அதிகாரம் கிடைத்துள்ளதால் இலகுவாக இருக்கும் என நம்புகிறோம். என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள மேற்படி கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

முதலில் பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்தி சாமானியனின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழி கோலுங்கள். அதுவே இன்றைய அத்தியாவசிய அடிப்படைத் தேவை. குறிப்பிட்ட காலத்துக்குள் உலக ஒழுங்கு நடப்பியலுக்கமைய பொருளாதார நிலையியலை சீர்படுத்துவீர்கள் என பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

ஏற்றுமதி செய்யக்கூடிய உள்நாட்டு உற்பத்தியை அதிகம் ஊக்குவியுங்கள், போர்க்கால அடிப்படையில் அதனால்தான் அந்நிய செலவாணியை ஈட்ட முடியும்.

எனவே கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கு ஏற்ற முறைமையை (சிஷ்ரம்) உருவாக்கவில்லை.

தூய அரசியலை மேற்கொள்ளாமல் சாக்கடை அரசியலை மேற்கொண்டு நாடு அழிவுப் பாதைக்கு இட்டு செல்லப்பட்டுள்ளது.

காரணம் பல்லினத்தன்மை அற்ற பௌத்த தேசியவாத மேட்டடிமையைப் போக்கை முதன்மைப் படுத்தியதன் விளைவே இந்த நிலைமைக்கு அடிப்படைக் காரணம்.

ஆகவே பௌத்த தேசியவாதமும், யுத்த வெற்றிவாதமும், இராணுவ மேட்டடிமைத்தனமும் தோற்றுவிட்டது என்பதை இனியாவது உணருங்கள்.

சிங்கள கடும் போக்காளர்களுக்கு உணர்த்துங்கள். புத்தரின் தம்மபதக் கோட்பாட்டை இனியாவது நடைமுறைப்படுத்த முனையுங்கள். நாட்டுக்கு நாடு கடன் பெற்று இலங்கைப் பொருளாதாரத்தை நிலை நிறுத்த முடியாது என்பதை இதுவரை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் வரை இலங்கைத் தீர்வு சுபிட்சமாக முன்னோக்கி நகர்தல் என்பது வெறும் பகட்டு பகல் கனவு. அது உதட்டளவுடன் உருமறைந்து போகும் என்பதைத் தாங்கள் உணராதவர் அல்லர். ஆகவே, இடைக்காலத் தீர்வையாவது முன்வையுங்கள். புலம்பெயர்ந்த இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் பெரும் பங்காற்றுபவர்கள்.

தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமை வழங்க வேண்டும் என்பதிலும் அதிகாரப் பகிர்வு மூலமே இன முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி இட முடியும் என பல சந்தர்ப்பங்களில் தாங்கள் வெளிநாட்டு ராஜ தந்திரிகளுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

2002 உடன்படிக்கை இதற்கு சிறந்த உதாரணம்.

வரலாறு தங்களுக்கு பெரும் வாய்ப்பை வழங்கியிருக்கிறது. அதை சரியாகப் பயன்படுத்தி வரலாறாக வாழ்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆகவே, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல பல முடிவுகளைத் துணிகரமாக தேர்தல் அரசியல் கடந்து எடுக்க வேண்டும். வருமானம் வரக்கூடிய அரச திணைக்களங்கள் பல ஊழலில் மூழ்கிக் கிடக்கின்றன. அவற்றை உடனடியாக மீட்டெடுங்கள். காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வருபவர்கள் நாட்டைப்பற்றி தேசாபிமான விசுவாசமின்றி வினைத்திறனற்ற அரசு நிறுவனங்களை உருவாக்கி வகை தொகையின்றி அரச ஊழியர்களை நியமனம் செய்துள்ளீர்கள்.


இந்த நாட்டுக்கு பெரும் சுமை அரச ஊழியர்களே! அதிகமானவர்கள் நாட்டுக்கும் பொருளாதாரத்துக்கும் எந்த பங்களிப்பும் இல்லை. வினைத்திறன் அற்றவர்கள் பட்டதாரியானால் அரச நியமனம் வழங்க வேண்டும் என்பது மிகத் தவறான கொள்கையாகும். தங்களின் 2003 ஆம் ஆண்டு ஆட்சியில் கொண்டுவந்தது போல் சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வந்து அரச ஊழியர்களை அரைவாசியாகக் குறையுங்கள். யுத்தம் முடிவுற்று பதின்மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட முப்படையினர் எதற்கு நாட்டின் பொருளாதார இழப்பில் பெரும் பங்கு இராணுவ செலவீனமே. இனம் கடந்து தேசமாக சிந்தியுங்கள்.

சனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள் இவர்களின் உச்சபட்ச வேதனத்தையும் சிறப்பு சலுகைகளையும் சாதராண வாழ்க்கைக்கு ஏற்றது போல குறையுங்கள். பாராளுமன்றம் கூடும் நேரகாலத்தை குறையுங்கள் அர்த்தமில்லாத பயனற்ற விவாதங்களே அதிகம் நடக்கின்றது. கால நீடிப்பு செய்யப்பட்ட அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் உடனடியாக கலையுங்கள் மாதாந்தம் பாரிய செலவு ஏற்படுகிறது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை எந்த வித அரசியலும் இன்றி சுயாதீனமாக செயற்பட அனுமதியுங்கள் சாதாரணமாக அரசியலுக்கு வந்து கோடிஸ்வரராக மாறிய அனைத்து அரசியல்வாதிகளின் சொத்துக்களை அரசுடமையாக்குங்கள்.

வினைத்திறனின்றி இருக்கும் அரச அதிகாரிகளை உடனடியாக மாற்றுங்கள் ஓய்வு பெறும் வயதை அறுபதாக குறையுங்கள் இல்லாவிட்டால் அரச திணைக்களங்கள் முதியோர் இல்லங்களாக மாறிவிடும். நிலையாக நின்று நிலைக்கக் கூடிய ஒற்றையாட்சி அல்லாத புதிய அரசியல் அமைப்பை உருவாக்குங்கள.; கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விரைவாக விடுதலை செய்யுங்கள் அல்லது மாற்றுவழி தேடுங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விரைந்து தீர்வு காணுங்கள் உண்மையை கண்டறிந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள். தொல்பொருள் திணைக்களம், வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, கனிய–வளத்திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக நில அதிகரிப்பை நிறுத்த வேண்டும், அபகரித்த நிலத்தை உடனடியாக விவசாய உற்பத்திக்காக விடுவிக்க வேண்டும். வடகிழக்கில் பௌத்த விகாரைகள் அமைப்பதை நிறுத்த வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். வடகிழக்கில் உள்ள இராணுவம் குறைக்கப்பட வேண்டும். ஆகவே இணைந்து முன் நோக்கி நகர்தலுக்கு தங்க ளின் நல்லெண்ண தாராளாத செயற்பாடே இன ஐக்கியத்துக்கு வழிவகுக்கும் என்பதை கடந்த கால பட்டறிவுடன் தெரிவித்து கொள்கிறோம். – என குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீனக்கப்பலுக்கு அனுமதி: மீள்பரிசீலனை செய்க!

## சித்தார்த்தன் கோரிக்கை



அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு எதிர்வரும் வார இறுதியில் சீனாவுக்குச் சொந்தமான நவீன கப்பல் பிரவேசிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்யுமாறு புளொட் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

சீனக்கப்பலின் இலங்கைக்கான விஜயம் தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

சீனாவுக்குச் சொந்தமான யுவான் வாங்–5 என்ற விஞ்ஞான ஆய்வுக்கப்பல் எதிர்வரும் வார இறுதியில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் பிரவேசிப்பதற்கு இலங்கை அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் இராஜதந்திர ரீதியில் ஏற்படும் பதற்றத்தைத் தவிர்ப்பதே பொருத்தமான நகர்வாக இருக்கும்.

இந்தியாவைப்பொறுத்தவரையில், மேற்படி கப்பல் அம்பாந்தோட்டைக்கு பிரவேசிப்ப தானது, தனது தென்பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

இதனை இந்தியா வெளிப்படையாகவே அறிவித் துள்ள நிலையில் தான், சீனக்கப்பலின் வருகைக்கு இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கின்றது.

தற்போதைய சூழலில் இந்தியாவே இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு அதிகளவில் உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கிவருகின்றது.

அவ்விதமான நிலையில், இந்தியாவின் கரிசனைக்கு உட்பட்ட விடயமொன்றை முன்னெடுப்பதானது, பொருத்தமான அணுகுமுறையாக அமையப்போவதில்லை. குறிப்பாக, தமிழ் மக்களையும், ஏனைய இனக்குழுமங்களையும் அது பாதித்துவிடும் அச்சமான நிலைமைகளும் ஏற்படும் சூழலும் உள்ளது.

அந்த வகையில், இந்திய, இலங்கை இடையே காணப்படும் இருதரப்பு உறவுகளைக் கருத்திற்கொண்டும், இராஜதந்திர பதற்றமான சூழலைத் தவிர்க்கும் வகையிலும் சீனக் கப்பலுக்கான அனுமதி வழங்கும் தீர்மானத்தை உடனடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும். –என்றுள்ளது.

# ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னரும் வடக்கில் இராணுவ மயமாக்கல் தொடர்கின்றது!

## வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ் விசனம்

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவான பின்னரும் வடக்கிலே இராணுவமயமாக்கல் தொடர்ச்சியாக நடைபெறுவதாக வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளரும் ரெலோவின் யாழ். மாவட்ட அமைப் பாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார். யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படும் நிலையில் வடமராட்சியிலுள்ள வல்லைவெளியிலே இராணுவத்தினர் உணவகங்கள் மற்றும் கட்டடங்கள் அமைப்பதற்கான தேவை என்ன? வடக்கிலே இராணுவமயமாக்கல் எனும் விடயம் கண்டிக்கத்தக்கது.

நாட்டில் இருக்கின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் கோட்டாபய அரசாங்கம் இராணுவத்தின் மூலம் தீர்வுகாணலாம் என நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அது போன்ற சூழ்நிலைதான் இன்றும் காணப்படுகிறது. தொடர்ச்சியாக இராணுவ விஸ்தரிப்பு செய்தமையும் நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணம் எனவும் உலகளவில் நாடு ஒத்துழைப்பை பெறாமல் போனமைக்கு மனித உரிமைமீறலும் இராணுவ மயமாக்கலுமே பிரதான காரணம் ஆகும்.

கடந்த காலத்திலே சீன அரசாங்கத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட தான்தோன்றித்தனமான அபிருத்திகளும் நடவடிக்கைகளுமே தான் தற்போதைய நெருக்கடிக்கும் நாடு கடன் சுமையில் இருப்பதற்கும் காரணம். – என்றார்.

# ரணில் சொல்லாமல் சொன்ன செய்தி!



என்.சத்தியமூர்த்தி

**அக்கரை / அக்கறை அலசல்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று, அவர் தலைமையிலான அரசுக்கு ஆதரவு அளிப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் கூறி உள்ளார். அதனை தொடர்ந்து, ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவரைச் சந்தித்து பேச்சு நடத்தியும் உள்ளனர். உடல்நிலை காரணமாக, சம்பந்தன் அதில் கலந்துகொள்ள முடியவில்லை என்பது வருந்தத்தக்க விடயம்.

இது வரவேற்கப்பட வேண்டிய முடிவு. 'நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். இனி நடப்பது நல்லவையாகவே இருக்கட்டும்' என்ற சம்பந்தனின் அரசியல் செயற்பாடு இதுவரையிலும் தமிழர்கள் தென்னிலங்கை அரசியலில் தோல்வி அடைந்த போது எல்லாம், அவர்களை மீண்டும் உயிர்த்தெழ வழி செய்துள்ளது. மீண்டும், மீண்டும் அம்புலிமாமாவில் வரும் விக்கிரமாதித்தன் கதை போல் மீண்டும் துவங்கிய இடத்திற்காவது கொண்டு நிறுத்தி உள்ளது.

இந்த முறையும் நிலைமை அதுவே. முன்பின் யோசிக்காமல், ரணிலை எதிர்த்து வாக்களித்துத் தோற்று விட்ட நிலையில், அவர் எதிர்பார்த்ததை விட அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றமை கூட்டமைப்புத் தலைமைக்கு ஜீரணிக்க முடியாத விடயம்தான்.

ஆனால், இது போன்ற தவறான முடிவுகளை எடுத்துவிட்டு, கடைசியில் கைகளைப் பிசைந்து கொண்டு நிற்பது ஒன்றும் கூட்டமைப்பிற்கோ, அதற்கு முந்தைய காலத்திய தமிழர் அரசியல் கூட்டுத் தலைமைகளுக்கோ ஒன்றும் புதிய விடயம் அல்லவே. அவ்வாறே, தோல்வியைக் கண்டு துவளாமல், தோளில் போட்ட துண்டை ஒரு முறை உதறி போட்டுக் கொண்டு, அடுத்த வேலையை பார்ப்பதும் அவர்களுக்குப் பழக்கமான வழக்கமே.

## அடுத்த கட்டம்

பத்திரிகைச் செய்திகளை வைத்துப் பார்க்கும் போது, தற்போதைக்கு ஜனாதிபதி முன்வைக்கும், அரசியல், பொருளாதார முன்னெடுப்புகளுக்கு முழு ஆதரவு கொடுப்பதாக மட்டுமே முடிவு செய்துள்ளதாகப் புரிந்து கொள்ள முடிகிறது. கூட்டமைப்பின் அடுத்த கட்ட முடிவுகள், அவர் முன்வைக்கும் திட்டங்களின் அடிப்படையில் இருக் கும் என்றும் தெரிகிறது. இது, கூட்டமைப்பு அமைச்சரவையில் பங்குபெறுவது குறித்த முடிவாகவும் இருக்கலாம்.

ஆனால், அது குறித்து தெளிவான எண்ணவோட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்தாலும், அதனைத் தெளிவாகப் பொது வெளியில் எடுத்து வைப்பது கூட்டமைப்பின் பழக்கம் அல்ல. ஏன், தமிழர் தலைமைக்கு எந்தக் காலகட்டத்திலும் பழக்கமானதும் அல்ல.

தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து, கூட்டமைப்பு உண்மையிலேயே கரிசனை கொண்டிருந்தால், அவர்கள், உடன் தானேயே சுற்றி வளைக்காமல், ஓர் அனைத்துக் கட்சி அமைச்சரவையில் அங்கம் வகிக்க முன் வர வேண்டும். அதற்குத் தெளிவான காரணங்கள் உண்டு. தற்போதுள்ள பொருளாதார சூழலில், புதிய அரசு மற்றும் எதிர்கால அரசுகளின் பொருளாதார திட்டங்களில் தங்கள் பகுதிகளுக்கும் தாங்கள் சார்ந்த மக்களுக்கான அவிர்பாகங்களை பெற்று கொடுப்பதற்கு, அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அவர்களின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையே போட்டா போட்டி இருக்கும். அதனைக் காரணம் காட்டி கூட, கட்சிகள் பிளவு படலாம், குதிரை பேரங்கள் நடை பெறலாம்.

## அமுத பிள்ளை

இந்த பின்னணியில், அமுத பிள்ளைக்கு மட்டுமே பால் கிடைக்கும் என்ற சூழ்நிலை உருவாகும். அதில், கூட்டமைப்பு கௌரவம் பார்த்து, தமிழ் மக்களின் உரிமைகளை மட்டுமே வைத்து அரசியல் செய்யலாம் என்று கருதினால், உள்ளதும் போன நொள்ளைக் கண்ணனாக மாறும் துர்ப்பாக்கியம் அடுத்த காலத்திலேயே ஏற்படலாம் என்பதே களநிலை. அந்த விதத்தில், பல காலமாக அமைச்சராக உள்ள டக்ளஸ் தேவானந்தா தனி ஒரு மனிதனாக தமிழ்மக்களுக்கு – அதிலும் குறிப்பாகத் தன்னைச் சார்ந்த வாக்காளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு – தேவையானவற்றைப் பெற்றுக் கொடுப்பதில் முழுவதுமாக வெற்றிபெற்றார் என்று சொல்லிவிட முடியாது, ஆனால், அவர் மட்டுமே தொடர்ந்து அத்தமைய முயற்சிகளையும் எடுத்து வருகிறார். தேவானந்தாவை பொறுத்தவரையில், நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார சூழலில், கூட்டமைப்பு உள்ளிட்ட பிற தமிழ் அரசியல் கட்சிகளுக்கு, அவர் தொடர்ந்து விடுத்துவரும் செய்தியும் அதுவே. கூட்டமைப்பு அத்தகைய ஒரு முடிவை எடுக்குமென்றால், அது அவருக்கு போட்டியான வட மாகாண அரசியலை, அமைச்சரவை வரைக்கும் கொண்டு செல்லும் என்று அவர் அறியாதவர் அல்லர்.



## கூறாமல் விட்டது

இந்த பின்னணியில், தன்னை சந்தித்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி சொன்னார் என வெளிவந்துள்ள பகிரங்கச் செய்தி குறித்து கூட்டமைப்புத் தலைமை, கவலைப்பட வேண்டும். அந்தக் கவலையே, அவர்களை, அடுத்தடுத்த கட்டங்களில், அமைச்சரவையில் அதிகாரபூர்வமாகவே சேர்ந்து கொள்ளக் கட்டாயப்படுத்தலாம்.

இவ்வளவுதான் விடயம். அதாவது அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், கூட்டமைப்பின் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐந்து பேர், தனக்கு வாக்களித்தனர் என ரணில் அவர்களிடம் கூறினார் என்று செய்தி வெளியாகி உள்ளது. இந்தச் செய்தி புதிதல்ல. ஏன், அதன் நம்பகத்தன்மையும் தமிழ் மக்கள் மத்தியில், முன்னெப்போதும் போல் அல்லாமல் கேள்வி குறியாகவில்லை.

ஏன், ரணிலின் சார்பில் அவரது அமைச்சரவை சகாவான ஹரின் பெர்ணாடோ இதே செய்தியைத் திரும் பித் திரும்பிக் கூறி வருகிறார். அதனையே ரணிலும் தற்போது, தன் பங்கிற்குக் கூறியுள்ளார். அல்லது, உறுதிப்படுத்தி உள்ளார் எனலாம். இது, கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவினருடன் ரணில் பகிர்ந்து கொண்ட ரகசியமா, அல்லது எச்சரிக் கையா? இதற்குக் காலம்தான் பதில் சொல்லும். அதற்கு முன்னரே, கூட்டமைப்பு நல்லதொரு பதில் தர வேண்டும் என்ற தனது எதிர்பார்ப்பையும் ரணில் தனது கூற்றில் உள்ளடக்கி உள்ளார்.

அதாவது, கூட்டமைப்பு வெளிதோற்றத்திற்குத்தான் ஒன்றாக இருக்கிறது, தனக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களிக்க வேண்டும் என்று வேண்டுமானால் கூட்டாக முடிவு எடுத்து, அதனையே வெளி உலகிற்கும் அறிவித்தது, ஆனால், உள்ளே உள்ள புறழ்வுகளும், பிளவுகளும் தனக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும். – இதுவே ரணில் சொல்லாமல் சொன்ன செய்தி.

ஒன்று, கூட்டமைப்பு தானாகவே அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளலாம். அல்லது, தனக்கு வாக்களித்த கூட்டமைப்பு எம்.பிக்கள் அவ்வாறு அரசில் சேர்ந்து அமைச்சரவைப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால், அதனைச் செயல்படுத்த வேண்டிய தார்மீக பொறுப்பு தனக்கு உள்ளது, பிற்காலத்தில், கூட்டமைப்பு தலைமை அது குறித்து வருத்தப்பட கூடாது. – இதுவே ரணில் சொல்லாமல் சொன்ன செய்தி.

இந்த செய்தியை வேறு யார் உணர்ந்தார்களோ இல்லையோ, ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு அரசியல் அனுபவம் வாய்ந்த சம்பந்தன் உணர்ந்து கொண்டார் என்று கருதலாம். எனவேதான், தன் தலைமையை எதிர்த்து, கூட்டமைப்பின் உறுப்பு கட்சிகள் முழுமையுமாக, அரசு ஆதரவு நிலைமையை தன்னிச்சையாக எடுத் தால், அது எதிர்கால தமிழ் அரசியலுக்கே சாபக்கேடாக அமையலாம், ஏன், அவர் சார்ந்த தமிழரசு கட்சி நாடாளுமன்றக் குழுவிலேயே பிளவு ஏற்படலாம், அது கூட்டமைப்புக்கு மட்டுமல்ல, தமிழரசு கட்சிக்கும் பலத்த அடியாக விழும் என அவர் சிந்தித்திருப்பார்.

எனவே தான், ரணில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்பும் முன்னரே, கூட்டமைப்பின் முந்தைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, ஜனாதிபதியின் செயல்திட்டங்களுக்கு முழு ஆதரவு அளிப்பது என்ற முடிவை சுமந்திரன் மூலமாகவும், பின்னர் அவராகவும் அறிவித்தார். காரணம், எப்போது ரணில், கட்சி தலைமைகளோடு நிறுத்திக் கொள்ளாமல், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனிதனியாக ஆதரவு கோரி கடிதம் அனுப்பினரோ, அப்போதே அவரது அரசியல் சாணக்கியத்தை, சம்பந்தன் புரிந்து கொண்டார் எனலாம்.

அதாவது, கட்சி தலைமைகள் தாமாக ஆதரவு தெரிவிக்கவில்லை என்றால், அவர்கள் தலை மீது ஏறி, தனி உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுக் கொள்வது அவரது திட்டம். இதனை, கூட்டமைப்பு மட்டுமல்ல, தன்னை எதிர்த்தே அரசியல் செய்யும், சஜித் பிரேமதாஸா தலைமையிலான மக்கள் சக்தி கட்சியையும் மனதில் நிறுத்தியே முன்னெடுத்தார். இதுவே, முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகளுக்கும் கூடப் பொருந்தும்.

## போட்டா போட்டி

இந்தப் பின்னணியில், கூட்டமைப்புத் தலைமையே அனைத்துக் கட்சி அரசில் அமைச்சரவை பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள முன்வரலாம். இது வரை, எந்தவொரு சிங்களத் தலைமையிலான அரசிலும் பங்குபெறுவதில்லை என்ற கொள்கையைக் கெட்டியாகக் கட்டிப் பிடித்துக் கொண்ட அவர்களுக்கு, இது ஒரு மாற்று. நாட்டின் பொருளாதார நெருக்கடி, ஒரு விதத்தில் தக்கதொரு வாய்ப்பு. தங்களது மானத்தையும் மரியாதையையும் காப்பாற்றிக் கொண்டே அரசில் சார்ந்து பணி ஆற்றுவது என்பது, ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம்.

கூட்டமைப்பு, அரசில் பங்கு பெறுவது என்று முடிவு செய்து விட்டால், அவர்களில் பத்தில் எத்தனை பேர் அமைச்சர்களாக முடியும்? இன்னும் சொல்லபோனால், உடல் நிலை காரணமாக, சம்பந்தன் நீங்கி மற்ற ஒன்பது பேருமே, ஒவ்வொரு விதத்தில் தகுதி உடையவர்கள். பிறரிடம் சொல்லமால், தங்களுக்குள்ளேயே அத்தகைய வாய்ப்புகளை எதிர்பார்த்து நிற்பவர்கள் என்று கூடச் சொல்லலாம். அதில் வெட்கப்படவோ, கேலி பேசுவதிலோ எந்தவித அர்த்தமும் இல்லை.

இவை அனைத்தையும் விடக் கூட்டமைப்பும், பிற தமிழ் கட்சிகளும் அரசுடன் இணைந்து, அமைச்சர் பதவிகளை பெற்று பணியாற்றுவதற்கு சில காரணங்கள் உள்ளன. உதராரணத்திற்கு, கடந்த 50 – 60 ஆண்டுகளாகவே, எதிர்க்கட்சி அரசியல் மட்டுமே செய்துவந்துள்ள கூட்டமைப்பு வகையாறா, அதனால் தோன்றிய மனப்பான்மையால், வடக்கு மாகாண அரசு தங்கள் வசம் வந்த போதும் கூட, தாங்கள்தான் ஆளும் கட்சி, தாங்களே பொறுப்பு கூறும் இடத்தில் இருக்கிறோம் என்று உணர்ந்து, செயல்பட்டார்கள் அல்லர்.

இதன் காரணமாகவே, விக்னேஸ்வரன் தலைமையிலான வட மாகாண அரசு, பிள்ளையார் பிடிக்க போய் குரங்கான கதையாக முடிந்தது. ஒரு வாதத்திற்காக தென்னிலைங்கை அரசியல் தலைமைகளையும், நாட்டின் அரசமைப்பையும் சாடலாம். ஆனால், யதார்த்தம் அதுவல்ல என்று மக்கள் புரிந்து கொண்டார்கள். அந்த விதத்தில், கூட்டமைப்பின் அண்மைக் காலத் தேர்தல் சறுக்கல்கள் புரிய வைத்திருக்க வேண்டும்.

## சுதந்திரக் காற்று

இது போன்றே முக்கியமான பிறிதொரு விடயம் உண்டு. இதற்கு முந்தைய மைத்திரி – ரணில் இரட்டை ஆட்சி முறைமையில், அதிகாரபூர்வ எதிர்க்கட்சி தலைவராக சம்பந்தன் செயற்பட்டும், அவரால், இனப்பிரச்சினைக்கு அப்பால் சென்று, (10 ஆம் பக்கம் பார்க்க...)




# ஆலய தரிசனம்

யாவரும் நாடோறும் திருக்கோயிலிற் சென்று, சிரத்தையோடு விதிப்படி தரிசனஞ்செய்தல் வேண்டும். தேவாலய தரிசனம் நாடோறுஞ் செய்தற்கு இயலாததாயின், புண்ணிய காலங்களிலேனும் தவறாமற் செய்தல் வேண்டும்.

ஆலயதரிசனம்செய்ய விரும்புவோர் ஆலயத்துக்கு சமீபத்தில் உள்ள புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, அநுட்டானம் முடித்துக் கொண்டு, ஆலயத்துக்கு போதல் வேண்டும்.

ஆலயத்திற்கு போகும்பொழுது, ஒரு பாத்திரத்திலே தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை முதலியவை வைத்து, அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக் கொண்டு போதல் வேண்டும். இவற்றுக்குப் பொருளில்லாதவர் பத்திர புஷ்பங்களேனுங் கொண்டு போய்க் கொடுத்து வணங்கல் வேண்டும். அதுவுங் கூடாதவர் சந்நிதியிலுள்ள செத்தை முதலியவற்றை போக்கியேனும் வணங்கல் வேண்டும்.

திருக்கோயிலுக்குச் சமீபத்தவுடனே, திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து, பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் பண்ணல் வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது.

அட்டாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும் படி வணங்குதல். திரயாங்க நமஸ்காரமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்தல்.

நமஸ்காரம் மூன்றுதரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். ஒருதரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

நமஸ்காரம் பண்ணுமிடத்து மேற்கேயாயினும் தெற்கேயாயினும் கால் நீட்டல் வேண்டும். கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் கால் நீட்டலாகாது.

கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் சிரசை வைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து, நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, கடவுளை மறவாத சிந்தனையோடு இரண்டு கைகளையும் இருதயத்திலே குவித்து கொண்டு, கால்களை மெல்ல வைத்துப் பிரதஷிணம் பண்ணல் வேண்டும்.

சிவபெருமானை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பதினைந்துதரமாயினும், இருபத்தொரு தரமாயினும் பிரதஷிணம் பண்ணல் வேண்டும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டுதரமும், பார்வதி தேவியாரையும் விஷ்ணுவையும் நந்நான்கு தரமும், பிரதஷிணம் பண்ணல் வேண்டும்.

பிரதஷிணம் பண்ணும் ஆவரணத்திலே தூபி நிழலேனும் துசத்தம்ப நிழலேனும் இருந்தால் அந்த நிழலில் மூன்று கூறு நீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லல் வேண்டும். கடவுள் உற்சவங் கொண்டருளும் பொழுது அந்த நிழல் இருப்பினும், நீக்காது செல்லலாம்.

அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே பிரதஷிணம், நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது.

பிரதஷிணம் பண்ணிச் சந்நிதானத்திலே நமஸ்காரஞ்செய்து, எழுந்து கும்பிட்டுக் கொண்டு உள்ளே போய், கடவுளைத் தரிசித்து மனசிலே தியானித்து, சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து, மனங்கசிந்துருக, உரோமஞ் சிலிர்ப்ப, ஆனந்தவருவி சொரிய இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லல் வேண்டும்.

அருச்சகரைக் கொண்டு கடவுளுக்கு அருச்சனை செய்வித்து, தேங்காய், பழம் முதலியவற்றை நிவேதிப்பித்து, கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணுவித்து அருச்சகருக்கு இயன்ற தஷிணை கொடுத்தல் வேண்டும்.

கடவுளைத் தரிசனஞ் செய்துகொண்டு, அவருக்கு புறங்காட்டாது பலிபீடத்திற்குஇப்பால் வந்து மூன்றுதரம் நமஸ்கரித்து, எழுந்து வடக்கு நோக்கி இருந்து, கடவுளை தியானித்துக் கொண்டு, அவருடைய மந்திரத்தில் இயன்ற உருச்செபித்து, எழுந்து, வீட்டுக்குப் போதல் வேண்டும்.



**திருக்கோயிலில் செய்யலாகாத குற்றங்களாவன:-**

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், சனனாசௌச மரணாசௌத்தோடு போதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர் சிந்துதல், அபான வாயுவிடுதல், பாக்குவெற்றிலையுண்டல், தாம்பூலம் உழிழ்தல், போசன பானம் பண்ணுதல், நித்திரை செய்தல், மயிரைக் கோதி முடித்தல், சூதாடல், சிரசிலே வேட்டி கட்டிக்கொள்ளல், தோளிலே உத்தரீயமிட்டுக் கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், வாகனமேறிச் செல்லுதல், குடைபிடித்துக் கொள்ளுதல், பாதரயைிட்டுக் கொள்ளுதல், உயர்ந்த தானத்திலிருத்தல், ஆசனத்திருத்தல், தூபி – துசத்தம்பம்– பலிபீடம் – விக்கிரகம் – என்னும் இவற்றின் சாயையை மிதித்தல், விக்கிரகத்தையும் நிர்மாலியத்தையம் தீண்டுதல், பெண்களைத் தீண்டுதல், பெண்களை இச்சித்துப் பார்த்தல், ஒரு தரம் இருதரம் வலம் வருதல், ஓடி வலம் வருதல், கடவுளுக்கும் பலிபீடத்திற்கும் குறுக்கேபோதல், அகாலத்திலே தரிசித்தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், வீண்கீதம் பாடல், வீண்கீதம் கேட்டல், திருவிளக்கவியக் கண்டும் தூண்டா தொழிதல், திருவிளக்கில்லாதபோது வணங்குதல், உற்சவங் கொண்டருளும் பொழுது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல், முதலானவைகளாம்.

இக் குற்றங்களுள் ஒன்றை அறியாது செய்தவர் கடவுளுடைய மந்திரத்தை செபிக்கின், அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் விழுந்து வருந்துவார்கள். அவருக்குப் பிராயச்சித்தமில்லை.

(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து)

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் கட்டுரைப்போட்டி - 2022

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு எதிர்வரும் 2022.08.09 ஆம் திகதி சைவம், தமிழ், பண்பாட்டு கலாசார விழுமியங்கள்தொடர்பானபாடசாலைமாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. இப்போட்டியானது யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே நடைபெறும்.

2. பிரிவுகள் –

**தரம் 6,7,8 - கனிஷ்ட பிரிவு - 100 சொற்கள்**
**தரம் 9,10,11 - மத்திய பிரிவு - 150 சொற்கள்**
**தரம் 12,13 - மேற்பிரிவு - 200 சொற்கள்**

3. கட்டுரை தலைப்புக்கள் சமய பண்பாட்டு விழுமியங்கள், மனிதவாழ்வின்நெறிமுறைகள், மாணவர்கள் வளர்க்கவேண்டிய திறமைகள், பண்புகள் மற்றும் நல்லூரானின் பெருங் கருணை சார்ந்து அமையப்பெறும்.

மாணவர்களின் கட்டுரைக்கான தலையங்கங்கள் போட்டிக்கு முதல் நாள் மதியத்தின் பின்னர் உரிய பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்கப்படும்.

4. பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்கள் பங்குபற்றும் திறந்த பிரிவு போட்டிகள் 250 சொற்களை கொண்டதாக அமையும். திறந்த பிரிவில் பங்குகொள்ள விரும்புபவர்கள் 08.08.2022 ம் திகதி புதன் கிழமை மாலை 12 மணிக்கு முன்னதாக sevvalinayanamgmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது பதிவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் திறந்த பிரிவில் பங்குபற்றும் மாணவர்கள் தமது மாணவர் பதிவை உறுதிப்படுத்திக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. போட்டி 09.08.2022 ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 09 மணிக்கு பாடசாலைகளிலும், திறந்த பிரிவுக்கு 09.08.2022 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 09 மணிக்கு யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

6. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்கள் பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்களும் அடுத்த ஏழு இடங்களைப் பெறுவோருக்கு கௌரவ பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## பதிகமும் பொழிப்பும்

**பாடல் - 08**

**குன்றின்உச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூழ் இலங்கை**
**அன்றிநின்ற அரக்கர்கோனை யருவரைக்கீழ் அடர்த்தாய்**
**என்றுநல்ல வாய்மொழியா லேத்தியிராப் பகலும்**
**நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.**



**பொருள் :**

இலங்கைத் தீவின் மத்தியில், உயர்ந்துநின்றகுன்றின் உச்சியில் வீணைக் கொடியோடு, மதில்கள் சூழ அமையப்பெற்ற, மாளிகையில் இருப்பவனும் பத்துத் தலைகளைக் கொண்ட, அரக்கர் குலத்து அரசனான இராவணனை, கோபித்துக் கொண்டு சாமகானம் இசைத்து மயக்குகிறேன், வரம் பெறுகிறேன் என்று கூளுரைத்து மலையைத்தூக்கி, அசைத்தவனை, கட்டைவிரலால் அழுத்தி நெருக்கியவனான உன்னை, நல்ல நல்ல மந்திரச் சொற்களால், இரவும், பகலும், வாய்வழியே மொழிந்து, ஏத்தி மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கி நீரில் ஊறிய துணிணைப் போல், நைந்து உருகும் மெய் அடியார்களின் இடர்கள் அனைத்தையும் அடியோடு களைந்து அருவாய் எம் குருமணியே, வேந்தனே கோனே! கோமானே! திருநெடுங்களம் வாழும் இறைவனே!

**திருச்சிற்றம்பலம்**
**ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்**
**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து)**

# ஜோன்ஸ்டன், சனத், மிலான், டொன், சதா நாலக்கவின் தொலைபேசிகளை சி.ஐ.டியில் ஒப்படைக்குமாறு உத்தரவு

மைனா கோ கம, கோட்டா கோ கம மீதான அரசாங்க ஆதரவாளர்களின் அத்துமீறிய தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மிலான் ஜயதிலக, சனத் நிசாந்த ஆகியோரினதும் சிங்கள, பௌத்த செயற்பாட்டாளராக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் டொன் பிரியசாத், பாதாள உலக தொடர்புகளை உடைய சதா நாலக எனும் நாலக விஜேசிங்க ஆகியோரது கையடக்கத் தொலைபேசிகளை விசாரணையாளர்களான சி.ஐ.டி.யினரிடம் ஒப்படைக்க கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டது. கோட்டை நீதிவான் திலின கமகே இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

மைனா கோ கம,கோட்டா கோ கம மீதான அரசாங்க ஆதரவாளர்களின் அத்துமீறிய தாக்குதல்கள் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் புதன்கிழமை கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, இதுவரை கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள 36 சந்தேக நபர்களில் 35 பேர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக , மேல் நீதிமன்றில் வழக்கொன்று தொடர்பில் ஆஜராவதால் அவர் மட்டும் ஆஜராகவில்லை என அறிவிக்கப்பட்டது.

விசாரணையாளர்கள் சார்பில், விசாரணை அதிகாரியான சி.ஐ.டியின் விஷேட விசாரணைப் பிரிவு இலக்கம் 3 இன் பொறுப்பதிகாரி உபுல் கல்வலகே தலைமையிலான குழுவினர் ஆஜராகியதுடன் சட்ட மா அதிபர் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரால் லக்மினி கிரிஹாகம ஆஜரானார்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன ஆஜரானார்.

சந்தேக நபர்களுக்காக சட்டத்தரணி கமகே, சானக அபேவிக்ரம உள்ளிட்ட குழுவினர் ஆஜராகினர்.

இதன்போது நீதிமன்றில் விசாரணை நிலைவரம் தொடர்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரால் லக்மினி கிரிஹாகம விளக்கினார்.

இவை தொடர்பில் உத்தரவுகளை வழங்கிய நீதிவான், சந்தேக நபர்களின் தொலைபேசி கோபுர தரவுகளையும் பெற்று ஒப்பீடுசெய்து விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க சி.ஐ.டியை பணித்தார்.

கடந்த மே 9 ஆம் திகதி, இந்த தாக்குதல் சம்பவம் பதிவான போது, அலரி மாளிகைக்கு ஆள்களை அழைத்து வந்தமையை மையப்படுத்தியும் விசாரணை நடத்தப்பட்டது.

இதன்போது 25 இ.போ.ச. பஸ்களிலும் 23 தனியார் பஸ்களிலும் அலரி மாளிகைக்கு ஆள்கள் அழைத்து வரப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இதில் 13 தனியார் பஸ்கள் மற்றும் 13 இ.போ. ச. பஸ்கள் தொடர்பில் சாட்சிப் பதிவுகள் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது முக்கியமான சாட்சியம் ஒன்று வெளிப்பட்டது. சாட்சியாளரின் அடையாளத்தை வெளிப்படுத்துவது அவருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்பதால் அடையாளத்தை மறைத்து சாட்சியம் என்ன என்பது தொடர்பில் மட்டும் மன்றுக்கு தெரிவிக்கின்றேன்.

ஓர் இ.போ.ச. டிப்போவிலிருந்து குறித்த சாட்சியாளருக்கு வழங்கப்பட்ட பணியின் பிரகாரம், அவர் ஓர் அரசியல்வாதியின் அலுவலகத்துக்கு பஸ்ஸை செலுத்திக் கொண்டு கடந்த மே 9 ஆம் திகதி சென்றுள்ளார்.

அந்த அலுவலகத்தில் மது போதையில் இருந்த குழுவினர் இரும்பு பொல்லுகளுடன் அந்த பஸ்ஸில் ஏறினர் என சாட்சியாளர் தெரிவித்துள்ளார். அவர்கள் அலரி மாளிகைக்கு அருகே இறங்கும் போதும், அந்த இரும்பு பொல்லுகளை உடன் எடுத்துச் சென்றனர் என சாட்சியாளர் கூறியுள்ளார். இது மிக முக்கியமான சாட்சியமாகும்.

மே 9 ஆம் திகதி பொலிஸார் கடமைகளைச் சரியாகச் செய்யத் தவறினார்களா எனும் விசாரணை நிறைவு செய்யப்பட்டு கோவை சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. - எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து விசாரணைகளில் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் கேள்வி மன்றில் எழுப்பட்ட நிலையில், மேலதிக வழக்கு விசாரணைகள் இந்த மாதம் 24 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டன.



## கிளிநொச்சியில் விமானப் படையினரால் உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு!

விமானப் படையினரின் நிதிப் பங்களிப்பில் மக்களுக்கான உலர் உணவு பொதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடு விமானப் படையினரின் 11 ஆம் ஆண்டு நிகழ்வு நிறைவு தினத்தை முன்னிட்டு விமானப்படை பிரிவினரின் ஓய்வுநிலை அதிகாரிகளின் நிதிப் பங்களிப்பில் இன்றைய புதன்கிழமை இந்த உணவுப் பொதி வழங்கி வைக்கப்பட்டது. இராமநாதபுரம், அழகாபுரி கிராமத்தில் உள்ள 200 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவு பொதியை இரணைமடு விமானப்படையின் பொறுப்பதிகாரி தசாநாக்க வழங்கிவைத்தார். இராமநாதபுரம் அழகாபுரி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், விமானப்படையின் உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## மறைந்த முன்னாள் அமைச்சர் நூர்தீன் மசூர் வீட்டில் திருட்டு

### ஒரு கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியான பணம், நகைகள்

*மறைந்த முன்னாள் அமைச்சர் நூர்தீன் மசூரின் புத்தளம் - நாகவில்லு பகுதியில் உள்ள வீட்டிலிருந்து சுமார் ஒரு கோடியே 60 லட்சம் ரூபா வரை மதிப்புள்ளதாக நம்பப்படும் பணம் மற்றும் நகைகள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என புத்தளம் பொலிஸார்*



*தெரிவித்தனர்.*

*பல வர்த்தகங்களுக்கு உரிமையாளர் எனக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் நூர்தீன் மசூரின் மறைவுக்கு பின்னர், குறித்த வீட்டில் அவரது மனைவி வசித்து வந்துள்ள நிலையில், அவர் வீட்டிலில்லாத சமயம் இந்த திருட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.*

*களவாடப்பட்டுள்ள பொருள்களில், தங்க நகைகள் மற்றும் பிற பொருள்களை விட, 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணமும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கும் பொலிஸார், அந்த பணம் வைக்கப்பட்டிருந்த 25 லட்சம் ரூபா வரை பெறுமதியான பெட்டகம் உடைக்கப்பட்டுள்ளதால் அதற்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறினர்.*

*எவ்வாறாயினும் பொலிஸார், இந்தத் திருட்டுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கும் நாகவில்லு பகுதியைச் சேர்ந்த 22 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட 10 பேரை அடையாளம் கண்டுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.*

*களவாடப்பட்ட பொருள்களில் சில மீட்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்ட பொலிஸார், சந்தேக நபர்களில் பலர் போதைப் பொருளுக்கு அடிமையானோர் எனக் கூறினர்.*

## ரணில் சொல்லாமல் சொன்ன செய்தி!

(8ஆம் பக்கத்தொடர்ச்சி)

தேசிய அரசியலில் எந்தப் பங்களிப்பும் செய்ய முடியவில்லை. ஏன், சம்பந்தன் மற்றும் பிற கூட்டமைப்பு உறுப்பினர்களும், நாடாளுமன்றத்தின் அந்தக் காலகட்டத்தில் பேசிய உரைகளும் தமிழ் தேசியத்திற்கு அப்பால் செல்லவில்லை. அதற்கான முயற்சியும், முஸ்தீபுகளும் அவர்களிடம் இருக்கவில்லை. இதற்கும், வேரோடி விட்ட எதிரி மனப்பான்மையே காரணம்.

தற்போது மாறிவிட்ட தேசிய அரசியல்,பொருளாதார சூழ்நிலை, மற்றும் மாறிவரும் உலகியல் அரசியல் மற்றும் பொருளாதார நிலைகள் குறித்தெல்லாம் அறிந்து, அவற்றில் ஆளுமை இருந்தால் மட்டுமே, எதிர்வரும் இருபத்தியோராம் நூற்றாண்டின் மீதமுள்ள சுமார் எண்பது ஆண்டுகள், தமிழ் தேசியம் பேசுவோரும் குப்பை கொட்ட முடியும்.

இல்லை என்றால், அவர்களும், அவர்களது எதிர்கால தலைமைகளும், தொடர்ந்து குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டிக்கொண்டு இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் நம்பி அரசியல் செய்து வரும், தமிழ் இளைய தலைமுறை, கிணற்றுத் தவளை மனப்பான்மையை விட்டு பல காலம் ஆகிவிட்டது.

எப்போது, விடுதலை புலிகள் இயக்கத்தின் ஆதிக் கம் முடிவுற்றதோ, அந்த இளைஞர்கள் சுதந்திர காற்றைச் சுவாசிக்கத் துவங்கி விட்டார்கள். அவர்களுக்கு ஏற்றால் போல், தற்போதைய சமூக ஊடக சுற்றுப்பாடும் செயல்படுகிறது. அதாவது, புலம்பெயர்ந்தோரின் கீறல் விழுந்த ரிக்கார்டின் தமிழ்த் தேசியத்திற்கு அப்பால், இளைய தலைமுறையினர், உலக நடப்புகளையும் அதில், இலங்கை தமிழ்த் தேசிய அரசியலின் இடத்தையும் கூட நன்றாகவே புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாவம், அவர்களை நம்பியிருக்கும் தமிழ் தேசியம் மட்டுமே பேசும் கடந்த தலைமுறை அரசியல்வாதிகள் மட்டுமே, தாங்கள் நின்ற இடத்திலேயே நின்று கொண்டு, உலகம் உருண்டை என்ற வகையில் கதைத்து வருகிறார்கள். இந்த நிலைமை மாறி, எதிர்காலத் தமிழ்த் தேசிய அரசியல், அந்தக் காலகட்டத்திற்கான நாட்டு மற்றும் உலக நடப்புகளோடு ஒன்று சேர்ந்து பயணம் செய்வதற்கும், இன்று கூட்டமைப்பும் பிற தமிழ்க் கட்சிக ளும், அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு தங்களது அரசியல் மனப்பாங்கு மற்றும் செயல்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும்!